**This Question Paper consists of 31 questions and 8 printed pages.**
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | | **Code No. 60/S/A/TM**

**Set - A**

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : 1. ____________________

2. ____________________

---

**I. பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A), (B), (C), (D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**4.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6.** உங்களது வினாத்தாளின் **Code** எண் **60/S/A/TM - A** விடைத்தாளில் எழுதுங்கள்.

# TAMIL

# (தமிழ்)

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு :** (1) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய **சரியான** வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக. **1×11=11**

**1** யார் இவ்வுலகில் நீடு வாழ்வார் ?

(A) பணமுடையவர்கள் (B) பலமுடையவர்கள்

(C) இறைவனை வழிபடுபவர்கள் (D) படித்தவர்கள்

**2** சேர நன்னாடு என்பது -

(A) கேரளம் (B) தமிழ்நாடு

(C) ஆந்திரம் (D) மத்திய பிரதேசம்

**3** ஆணின் அடக்குமுறைக்கு என்ன சமாதானம் சொல்லப்படுகின்றது ?

(A) அவனது ஆபிஸ் டென்ஷன் (B) அவனது உரிமை

(C) அவனது பலம் (D) பெண்ணின் அறியாமை

**4** அரவம் என்ற சொல்லின் பொருள் -

(A) பருவம் (B) பாம்பு

(C) கலை (D) பறவை

**5** அடக்கத்துடன் இருப்பவர் -

(A) செல்வம் நிறைந்தவர் (B) அழகு நிறைந்தவர்

(C) அறிவு நிறைந்தவர் (D) வறுமை நிறைந்தவர்

6 தொட்டனைத்தூறும் -

(A) தொட்டனைத்து + ஊறும் (B) தொட்டவை + ஊறும்

(C) தொட்டு + அனைத்து + ஊறும் (D) தொட்டு + அனைத்தூறும்

7 மனிதன் கொடுக்கும் தவறான ................ ஆல் கணினியில் தவறுகள் ஏற்படும்.

(A) தர்க்கம் (B) சோதனைகள்

(C) கட்டளைகள் (D) தொகுப்புகள்

8 மடத்தைக்குறிக்கும் வேறு பெயர் -

(A) விகாரம் (B) ஆலயம்

(C) பள்ளி வாசல் (D) ஆசிரமம்

9 சங்குத் தேவன் கிழவியிடம் ................ கொடுத்தான்.

(A) பாம்டம் (B) பணப்பை

(C) சங்கு (D) உணவு

10 வங்கிப் பணம் எடுக்கும் படிவத்தில் முதற் பக்கத்திலுள்ள Entered, Folio என்னும் இடங்களை -

(A) நிறைவு செய்வது தேவையற்றது

(B) வாடிக்கையாளர் நிறைவு செய்வார்

(C) வங்கி அலுவலர் நிறைவு செய்வார்

(D) குறுக்குக் கோடிட்டு அடித்துவிட வேண்டும்

11 இரட்டைக்கிளவிக்கு எடுத்துக்காட்டு -

(A) பாம்பு! பாம்பு (B) கலகல

(C) அக்கம் பக்கம் (D) தீ! தீ! தீ!

**12** கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

நமது நாட்டின் சுற்றூர்ச் சூழலில் அண்மைக்காலமாக இரு மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இயற்கை வளங்கள் ஒரு புறம் குறைந்து வருகின்றன. பொதுப்பயனுக்கு என்றிருந்த நிலப்பரப்பு மற்றொரு புறம் தனிப்பட்ட சிலரின் பயனுக்கு என்று மாறி வருகின்றது. இத்தகைய மாறுதல்களினால் பெரிதும் அல்லல் படுபவர்கள் கிராமப்புற பெண்களே ஆவர். இயற்கை வளங்கள் குறைந்து வருவதை காடுகளின் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு சருங்கிக் கொண்டு வருவதிலிருந்து அறியலாம். இதன் நேரடி விளைவாக நீர்வளம் குறைந்துள்ளது; மண் அரிப்பும் நீர் அரிப்பும் காற்று மாசுபடுதலும் ஏற்பட்டுள்ளன. வேளாண்மைக்குத் தகுதியான நிலவளம் ஆங்காங்கே குறைந்துள்ளது. செயற்கை உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் தண்ணீருடன் கலந்து சென்று இயல்பாக தண்ணீர் கிடைக்கும் இடங்களை மாசுபடுத்துகின்றன. மனிதனும் நீர்வாழ் உயிரினங்களும் பிறவகை உயிரினங்களும் பயன்படுத்த முடியாத இடங்களாக இவை மாறியுள்ளன.

**வினாக்கள் :**

(1) இயற்கை வளங்கள் குறைந்து வருவதை எதன் மூலம் அறியலாம் ? **2**

(2) அல்லல் என்ற சொல்லின் பொருள் யாது ? **1**

(3) நீர் எவ்வாறு மாசுபடுகின்றது ? மாசுபடுவதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பு யாது ? **3**

(4) சுற்றூச் சூழலில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் யாவை ? **3**

(5) கிராமப்புற பெண்கள் எதனால் அல்லல் உறுகின்றனர் ? **3**

**13** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ ? அப்பா ?
எவர் உடம்பிலும் சிவப்பே இரத்த நிறமப்பா
எவர் விழி நீர்க்கும் உவர்ப்பே இயற்கை குணமப்பா
பிறப்பினால் எவர்க்கும் உலகில் பெருமை வராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே உலகம் நாடும் மேற்குலத்தார்
திண்மை செய்பவரே என்றும் தீண்ட வெண்ணாதார்

**வினாக்கள் :**

(1) சாதி எங்கெங்கு தெரிவதில்லை ? **2**

(2) விழி நீரின் இயல்பு யாது ? **1**

(3) சிறப்பு எதனால் வரும் ? **1**

(4) தீண்ட வொண்ணாதவர் யாவர் ? **1**

(5) மேற்குலத்தார் யாவர் ? **1**

**14** குறவர் இன குல ஒழுக்கம் யாது ? **1**

**15** இராமனே அனுப்புக என்ற முனிவருக்கு தசரதனின் விடை யாது ? **1**

**16** காந்தியாரின் தென்னாப்பிரிக்கப் பயணத்திற்கான காரணம் யாது ? **1**

**17** புருசனைத் திருத்த அஞ்சம்மா என்ன செய்தாள் ? **1**

**18** தமிழில் மொழி பெயர்க்க. **1**

(அ) pnched card

(ஆ) Capacitor

**19** (அ) சேர்த்து எழுதுக. $2 \times \frac{1}{2} = 2$

(i) என் + ஆனும்

(ii) வினை + உலப்ப

(iii) கிணறு + அகம் + அத்து

(iv) இனிமை + நீர்

(ஆ) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சொற்களை எழுதுக. **2**

(1) பை

(2) மை

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. **2**

(1) ஏழையின் தவிப்பை ...................... அறியமாட்டான்.

(2) அவன் காலையில் மலையில் ஏறினான்; மாலையில் ..................... .

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(1) பாதரட்சை

(2) கேடில்

(3) பொச்சாந்து

(4) முனியாது

20 பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) கை கொடுத்தல்

(2) கை கழுவுதல்

21 மகாத்மா என்று காந்திக்கு புகழாரம் சூட்டியவர் யார் ? 1

22 உனது பள்ளியில் நடைபெற்ற 'அறிவியல் கண்காட்சி' குறித்து ஒரு பத்தியில் குறிப்புரை எழுதுக. 4

23 தமிழ் மொழி எத்தகைய பயன்களையெல்லாம் தருவதாகப் பாவேந்தர் கருதுகின்றார் ? 5

24 வீட்டைச் சுற்றி நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் துறை விடுக்கும் அறிவிப்பினை எழுதுக. 5

**(அல்லது)**

நடைபெறவுள்ள 'இயற்கை உணவுத் திருவிழா' குறித்த விளம்பர அறிவிப்பினை எழுதுக.

25 (அ) காலை-காளை பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. 2

(ஆ) முக்காரமிடுதல்-கனைத்தல் என்னும் ஒலிகள் எவ்விலங்குகளுக்குரியவை ? 2

26 உமது பள்ளி 'தமிழ் இலக்கிய மன்றம்' நடத்தும் போட்டிகள் குறித்த செய்திகளை அறிவிப்புப் பலகையில் இடம் பெறுமாறு அட்டவணை தயாரிக்க. 5

**(அல்லது)**

தொடர் வண்டியில் பயணம் செய்வதற்கான முன் பதிவு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. (22, கம்பன தெரு, சென்னையில் வாழும் நீ உன் நண்பனுடன் 28.12.2018 அன்று புதுதில்லி வருவதற்கு இரண்டாம் வகுப்பில் தமிழ்நாடு விரைவுத் தொடர் வண்டியில் பயணம் செய்வதற்கு ஏற்றவாறு இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. உனது பெயர் கண்ணன் என்றும் வண்டி எண் 29876 என்றும் கொள்க.)

வகுப்பு : (அ). ............................

வண்டி எண் / வண்டியின் பெயர் : (ஆ) ................................................ தேதி : (இ). .......................

படுக்கை (எண்ணிக்கை) : (ஈ) .................. புறப்படும் இடம் : (உ) .................... சேருமிடம் : (ஊ) ................

| வ. எண் | பெயர் (பதினைந்து எழுத்துகளுக்கு மிகாமல்) | பால் ஆ/பெ | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

விண்ணப்பதாரர் பெயர் & முகவரி ...............................................................

...............................................................................................

...............................................................................................

கையொப்பம்

...............................

27 கணினியின் சிறப்பியல்புகளைத் தெளிவாக விளக்கவும் ? 5

**(அல்லது)**

சங்குத் தேவனின் பண்பு நலன்களை விளக்குக ?

28 பிழை திருத்தம் செய்க : 5

(1) கன் கெட்ட பிண் சூறிய நமஸ்காரம் எதற்கு ?

(2) கிட்டாதாயிண் வெட்டெண மர.

(3) மயில் கூவியது.

(4) மளையில் மலை பெய்துள்ளது.

(5) புலவறும் அமைச்சரும் நாளை சுற்றுப் பயனம் சென்றனர்.

29 நீவிர் வாழும் பகுதியிலுள்ள சீர்கேடுகளைச் சரி செய்யுமாறு மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக. 7

**(அல்லது)**

உங்கள் ஊரில் நடைபெற்ற புத்தக கண்காட்சி பற்றி நண்பனுக்குப் கடிதம் ஒன்று எழுதுக.

30 ஏதேனும் ஒரு தலைப்பில் நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

(அ) ஊக்கமது கைவிடேல்

(ஆ) சிறு துளி பெரு வெள்ளம்

(இ) முயற்சி திருவினையாக்கும்.

31 ஏதேனும் ஒரு தலைப்பில் இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 10

(அ) கணினியும் கல்வியும்

(ஆ) அறிவியலின் பயன்கள்

(இ) நான் விரும்பும் புலவர்.

---